MY LORD VOUCHSAFE ME WISDOM

Tamil Heritage Foundation

ज्ञान-विज्ञान विमुक्तये


# சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி - 627 011

(தேசியத் தரமதிப்பீட்டுக் கல்விக்குழுவால் 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது;
சர்வதேசத் தரச்சான்றிதழ் ISO:9001:2015 பெற்றது.)

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் தன்னாட்சி நிதியில் அரசுதவி பெறும் தமிழ்த்துறை,
ரசுதவி பெறா தமிழ்த்துறை, சதக்கத் ஆய்விதழ் மற்றும் ஜெர்மனி தமிழ்மரபு அறக்கட்டளை

இணைந்து நடத்தும்


# தொல்லியல் நோக்கில் உலகத் தமிழர் பண்பாடு



## தொல்தமிழ்

### பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்


VOLUME - VII | சதக்கத் ஆய்விதழ் சிறப்புப் பதிப்பு | அக்டோபர் 2019

தமிழ்த்துறை வெளியீடு

04.10.2019

SADAKATH – A RESEARCH BULLETIN ISSN NO. : 2347-7644

INDEXED IN GOOGLE SCHOLAR

# கிழக்கிலங்கை மக்களின் வாழ்வியலில் கிராமியக் கலை வடிவங்கள்

சி. சூரியகுமார்,

**முன்னுரை.**

ஆக்கத்திறன் கொண்ட மனித முயற்சியினால் உருவாக்கப்படுவதே கலைகளாகும். கூடுதல் குறைதல் இன்றி எப்பொருளும் அளவோடு அமைந்திருப்பின் அந்த அமைப்பு பாராட்டத்தகும் நிலையை அடைகிறது. அப்பொருள் கலை அறிவோடு அமைக்கப்பட்டது என்று நாம் பாராட்டுகின்றோம். எனவே கலை என்பது அளவும் பொருத்தமும் தன்னுள் அடங்கி நிற்பது. அதே சமயத்தில் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவது, உள்ளத்தைத் தன்பால் ஈர்ப்பது.. எந்தவொரு கலையும் சமூக வாழ்வியலை நோக்கியதாகவே எழுகின்றது. அந்தவகையில் உலகிலுள்ள ஒவ்வேரின மக்களுக்கும் தனித்துவமான கலை வடிவங்களும், கலைப் படைப்புக்களும் காணப்படுகின்றன. அவ்வாறே ஈழத்தமிழர்களின் வாழ்வியலிலும் தனித்துவமான கலைவடிவங்கள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக ஈழத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்கின்ற தமிழர்களின் வாழ்வியலில் கிராமியக் கலைகள் மிகவும் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றன. எனவே அக்கலை வடிவங்கள் எவை எனக் கண்டறிந்து அவற்றினை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வானது அமைகின்றது. அத்துடன் இவ்வாய்வானது வரலாற்று மற்றும் விவரண ஆய்வு அணுகு முறைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் கீழ்வரும் கிராமியக் கலைகள் கிழக்கிலங்கை மக்களின் வாழ்வியலில் சிறந்து விளங்குவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

**கொம்பு முறி**

கொம்பு முறி எனப்படுவது ஒரே கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இரு வேறு பிரிவுகளாகப் பிரிந்து இவ்விளையாட்டை நடத்துவர். கொம்பு முறி விளையாட்டு கண்ணகி வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புடைய சமயக் கலையாகவே விளங்குகின்றது. அநேகமாகக் கண்ணகி அம்மன் சடங்குகள் நடைபெறும் காலப்பகுதியில் இவ்விளையாட்டு இடம்பெறும். கொம்பு முறி விளையாட்டு ஏன் எழுந்தது என்பதற்கு பின்வருமாறு கூறப்படுகின்றது. நீதி தவறிக் கோவலனைக் கொலை செய்குவித்த பாண்டிய மன்னனைப் பழிவாங்கும் மதுரை மாநகரினை எரித்து சினம் தனியாத கற்புக்கரசி கண்ணகியின் சினத்தை தணித்து அவளைக் குளிபுவிப்பதற்காக இடையர்கள், இளைஞர்கள் கொம்பு விளையாட்டைச் செய்ததாக கூறப்படுகின்றது.கொம்பு முறி விளையாட்டு ஒரே கிராமத்தில் தொடங்குவதற்கு முன்னர் இரண்டு பிரிவுகளாக அக்கிராம மக்கள் பிரிவார்கள். இதனை வடசேரி, தென்சேரி என அழைப்பர். வடசேரியைக் கோவலனுடைய கட்சி இதனைச் சுவாமிக் கட்சி

முதுநிலை விரிவுரையாளர் (இசைத்துறை), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

எனவும் தென்சேரியை அம்மாள் கட்சி என்றும் கூறுவர். மக்களுக்கு ஏற்படும் கொடிய நோய் நீங்கி மழைவளமும் செல்வமும் பெருகிட வேண்டும் என்பதற்காகவே கொம்பு முறி விளையாட்டினைக் கிராம மக்கள் கண்ணகி வழிபாட்டினுடன் சேர்ந்து செய்வதாகக் கூறப்படுகின்றது. எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் கூறலாம்.

"வடசேரியான் கொம்பு எங்கேயெங்கே
மணமுள்ள காழையின் மேலே மேலே
தென் சேரியான் கொம்பு எங்கே யெங்கே
செம்பரப்பற்றைக்கு கீழே கீழே"

இப்பாடலை வேட்டுவ வேடம் புனைந்து ஆடுவோர் தமக்குள் பாடுவர். (தங்கேஸ்வரி. க, மட்டக்களப்புக் கலைவளம், பக்கம் 60)

## காவடி

முருகப்பெருமானின் வழிபாட்டிற்குரிய ஒன்றாகக் காவடிச்சிந்து அமைகின்றது. வேண்டுதலின் பேரில் யார் வேண்டுமானாலும் காவடியைத் தூக்கிக் கொண்டு ஆடுவர். மட்டக்களப்பு பிரதேசத்தில் பன்னெடுங்காலம் தொட்டு இன்றுவரை ஆடப்பட்டு வருகின்றது. இப்பிரதேசத்தில் அன்றும் இன்றும் முருகன் கோவிலை அடியொட்டி அதன் விழாக்காலத்தின் போது காவடி எடுத்து ஆடக்கூடியதைக் காணக்கூடியதாய் உள்ளது. பொதுவாகக் காவடிகள் பால், பன்னீர், புஸ்பம், மலர்காவடி போன்று பல விதங்களில் எடுக்கப்படும். இதனைச் சிறியதாகப் பல்லாக்கு வடிவத்தில் அமைத்து அதனைத் தோளில் தூக்கிச் சென்று ஆலயத்தில் ஆடி இறக்கி வைப்பது காவடி ஆட்டத்தின் பொதுவான மரபாகும். இதனை மிகவும் அழகாக யார் வேண்டுமானாலும் தூக்கிக் கொண்டு ஆடலாம். அண்ணாமலைச் செட்டியார் (1865 – 1891) இயற்றியுள்ள காவடிச்சிந்து பாடல்கள் காவடி எடுத்து ஆடுவோரின் ஆட்டத்திற்குத் தகுந்தவாறு அமைந்துள்ளது. காவடிச்சிந்தின் இசை அமைப்பை நோக்கும் போது அது நாட்டுப்புறப் பாடல் இசை வகையைச் சேர்ந்தது என்பது எளிதில் புலனாகும். இவை இன்ன இராகம் என்று அறுதியிட்டுக் கூறமுடியாத படி உள்ளது. பெரும்பாலான பாடல்களில் ஹரிகாம்போதி, ஹரஹரப்பிரியா, நடபைரவி என்றே அழைக்கப்படுகின்றன. மேலும் சில பாடல்களில் ஆனந்தபைரவி, முகாரி, செஞ்சுருட்டி போன்ற இராகங்கள் அமைந்துள்ளன. மேலும் இப்பாடல்களில் தாளச்சிறப்பும் மிகுதியாக உள்ளது. சதுஸ்ரம், மிஸ்ரம், கண்டம் என்பன ஆட்டத்திற்கு ஏற்றாற்போல் அமைந்திருப்பது இதன் மற்றுமொரு சிறப்பாகும். (வித்துவான் க.ஓ.உ. நடராசா மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும், 1980, பக்கம் - 100)

## கும்மி

கும்மி என்பது கும்முதல், தட்டுதல் கையைக் கும்முதலின் காரணமாக இது கும்மி என்றும் பெயர் ஆயிற்று. தெய்வங்களை வாழ்த்தி வணங்கும் கும்மிப்பாடல்கள்

பயிற்றப்பட்டு வருகின்றன. இக்கும்மியானது தமிழகத்திலும் பயிலப்பெற்று வருகின்றன. பழங்காலத்தில் "கொம்மை" என்று அழைக்கப்பட்டது. இக் கொம்மி மருவி "கும்மி" என்றானது. இதற்கானப் பாடல்களும் காணப்பட்டது.

"கொம்மியடி பெண்கள் கொம்மியடி - இரு
கொங்கை குலுங்கவே கொம்மியடி"

என்பதாகும். இக் கும்மியினை ஆண்களும் பெண்களும் இணைந்து ஆடுவதனைக் காணலாம். கிராமப்புறத்து உழவர்கள் மாரியம்மன், பகவதியம்மன் முதலான அம்மன் விழாக்களை விரிவானக் கும்மி நிகழ்ச்சிகளுடன் பத்து நாட்கள் கொண்டடுவது வழக்கம்.(கிருஸ்ணபவானி. சி, பரதக் களஞ்சியம், 2011, பக்கம் 261)

**கோலாட்டம்**

கோலாட்டம் வட்டமாக நின்று ஆண்கள் அல்லது பெண்கள் பாட்டுப்பாடிக் கொண்டு ஆடுவது கோலாட்டமாகும். ஆட்டத்தில் கும்மியைப் போன்றது. கும்மி, கோலாட்டம் போன்றச் சமூக நடனங்களில் வட்டமான அமைப்பு முறை அழகுக்காக மட்டுமன்றி வரம்பில்லாமல் எவ்வளவு பேர் பங்கேற்க வந்தாலும் அவர்களுக்குத் தடையின்றி இடம் தந்து விரிந்து கொடுப்பதற்காகவே திட்டமிட்டு வகுக்கப்பட்டதாகும். பல்வேறு விதமான ஜதிவேறுபாடுகளுடன் வட்டமாகச் சுற்றி வந்து கோலாட்டம் போடுவதுதான் இதன் பிரதான அம்சமாகும். (செல்லத்துரை. க, அரங்கல் படையல்கள், 2007, பக்கம் - 5)இக்கோலாட்டத்துக்குரிய பாடல்கள் மிக எளிமையான கிராமிய நடையில் இருப்பதுடன் மாற்றி மாற்றியும் பாடப்படும். இக் கிராமியப் பாடல்களுக்கு இக் கோலாட்டம் இடம் பெறுகின்றது. இக் கோலாட்டத்தின் போது கோல்களைப் பல்வேறு அழகுக் கடதாசிகளால் அலங்கரிப்பர். ஒருவர் இரண்டு கோல்கள் அடிப்படையில் வைத்திருப்பர். (கிருஸ்ணபவானி. சி, பரதக் களஞ்சியம், 2011, பக்கம் 261 - 263)

**நாடகம்**

அவைக்கு ஆற்றப்படும் கலைகளுள் நாடகமும் ஒன்றாகும். கிழக்கிலங்கையில் இடம்பெறும் மேடை நாடகமானது சமயக்கருத்துக்கள், நகைச்சுவைகள், அன்றாடம் சமூகத்தில் நடைபெறும் நிகழ்வுகள் போன்ற விடயங்களை உள்ளடக்கி இக் கிராமத்தில் மேடை நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. நாடகம் என்பது நிகழ்த்திக் காட்டுவது. அது நிகழ்த்திக் காட்டும் இடமே அரங்கு எனப்படும்.இவ்வாறு கிழக்கிலங்கைப் பிரதேசத்தில் கூத்துக்களும் நடனங்களும் முக்கியத்துவம் பெறுகிறதோ அதே போன்று பாரம்பரிய விளையாட்டுக்களிலும் தைப்பொங்கல், சித்திரைப் புதுவருடப் பிறப்பு போன்ற விஷேட தினங்கள் மற்றும் ஏனைய காலங்களில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவ்வாறு இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களிடையே வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள், வசந்தன் கூத்து, மகிடிக் கூத்து, குரவைக் கூத்து, பறைமேளக் கூத்து ஆகிய கூத்து வடிவங்களும் காவடியாட்டம்,

கரகம், கும்மி, கோலாட்டம் போன்ற நடனங்களும் கொம்புமுறி, வார்போர், கட்டைப்பந்து, கிளித்தட்டு, கபடி, வட்டக் காவடி போன்ற பாரம்பரிய விளையாட்டுகளும் இப் பிரதேசத்தில் காணப்படும் பாரம்பரிய கிராமியக் கலை வடிவங்களாகக் காணப்படுகின்றன. (செல்லத்துரை. சு, அரங்கப் படையல்கள், 2007, பக்கம் 17)

**குரவைக் கூத்து**

கிழக்கிலங்கைப் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற சமய சமூகவியல் சார்ந்த நிகழ்வுகளில் குரவை போடுவது முக்கியம் பெறுவதுடன் இது இங்குள்ள மக்களிடம் காணப்படுகின்ற பாரம்பரியக் கூத்துக்களில் ஒன்றாகவும் மதிக்கப்படுகின்றது. இங்குள்ள கோவில் விழாக்கள் மற்றும் பத்தினி வழிபாட்டுச் சடங்கு ஆகிய காலத்தில் பெண்கள் குரவை ஆடுவர். இங்குள்ள முஸ்லீம் பெண்கள் கூட அவர்களின் மங்கள நிகழ்வுகளில் குரவை ஒலி செய்கின்றனர். இவ்வாறு குரவைக் கூத்தில் "ஆச்சிரியார் குரவை, குன்றக் குரவை" எனப் பலவகைப் பாடல்கள் இருப்பதுடன் இன்றும் பத்தினிக் கோவில்களில் இடம்பெறும் சடங்குகள் மற்றும் பிற நிகழ்வுகளிலும் செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகின்றது. ஆச்சியார் குரவை என்பது ஆயர் மகளிர் (முல்லை நில மக்கள்) திருமாலுக்காக ஆடும் கூத்து. தலையில் வட்டம் வரைந்து அதனை அறைகளாகப் பங்கீட்டுக் குரவையாடும் மகளிர் அதன் அறைகளில் நிறுத்தி அவர்களுக்கு முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இழி, விளரி, தாரம் என ஏழு பெயர் இட்டு இசைப்பாடி ஆடுவதும் ஆகும். இது இசையும் கூத்தும் பொருந்தியது. குன்றக் குரவை என்பது குறவர் மகளிர் (குறிஞ்சி நில வாசிகள்) முருகனுக்காக ஆடும் கூத்தாகும். (செல்லத்துரை. சு, அரங்கப் படையல்கள், 2007, பக்கம் 4)

**பறைமேளக் கூத்து**

கிழக்கிலங்கையில் பறையடிக்கும் தொழில் செய்வோரிடையே உள்ள ஒரு வகைக் கூத்து. இது கோவிலுக்கு வெளியே ஆடப்படுகின்றது. சடங்குகளுக்காக பறை மேளம் வாசிக்கப்படும் போது கோவிலுக்குள்ளேயே வாசிக்கப்படுகின்றது. இது ஒரு சமயம்சார் கலையே எனினும் சமயத்தை விடக் கலை அம்சமே மேலோங்கி நிற்கிறது. கோயில் வெளியிலே மக்கள் சுற்றி வர இருந்தோ, நின்றோ பார்க்கச் சமதள அரங்கிலே இக் கூத்தை ஆடுவார்கள். கோவிலின் வெளியே மேடை அமைவதைக் காணக்கூடியதாய் உள்ளது. மேலும் ஊர்ப் பெரியவர்கள் பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களின் வீட்டுக்கு முன்னாலும் மேடை அமைத்து பறை மேளக் கூத்து நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. ஒருவர் பல மணித்தியாலங்கள் இடுப்பில் தொங்கவிட்டுத் தாள லயத்துக்கு ஏற்ப அடிக்கும் வண்ணம் பாரமற்ற மரக்குற்றியினால் செய்யப்பட்டிருப்பதே இவ் வாத்தியமாகும். தோல் பொருத்தப்பட்ட இரு பக்கங்களும் சம அளவுடையனவாகவே இருக்கும். ஒரு பக்கம் பிரம்பாலும் (வலக்கை) மறுபக்கம் (இடக்கை) கைவிரல்களாலும் அடிக்கக் கூடியதான அமைப்பு இதன் விஷேடத் தன்மையாகும். ஆரம்பத்தில் பறைமேளக் கூத்து நடைபெற முன்னர் கோயிலுக்கு

வெளிவீதியில் நின்று கூத்தை ஆரம்பிக்கும் முன்னர் இது மூப்பள் என அழைக்கப்படும். அவர்களின் தலைவன் ஒரு தாளத்தினைப் பறையில் வாசிப்பார். இது அடுத்து வாசிக்கப் போகும் தாளங்களின் ஒரு கலவையாகும். அத் தாளத்துடன் கூர்த்துப் பார்க்க விரும்பும் மக்கள் கூத்துக்காரரைச் சுற்றி வெளியில் கூடுவர். இருவர் அல்லது மூவர் இடுப்பிலும் தாளிலும் பெரும்பறை சிறுபறைகளைத் தாக்கிய வண்ணம் ஆடிஆடிப் பறை ஒலி எழுப்புவர், இன்னொருவர் சொர்ணாளி எனும் சிறிய குழலை ஊதுவர். (மௌனகுரு.சி. நாடகம் - அரங்கியல் பழையதும் புதியதும், பக்கம் - 110)

**வடமோடிக் கூத்து**

வடமோடி எனப்பெயர் வந்தமைக்குக் காரணத்தைப் பார்ப்போமாயின் தமிழ் நாட்டின் வடக்கே காணப்படும் கர்நாடக மாநிலத்திலும் அருகேயுள்ள கேரள மாநிலத்திலும் ஆடப்படும் யசசாணம், கதகளி ஆகிய நடனங்களின் சாயல் பெற்றபடியாலும் இந்தியாவின் வடக்கே இருந்து இலங்கை வந்த ஆரியக் கூத்தே வடமோடியாகும். இவ் வடமோடிக் கூத்தின் பெரும் வளர்ச்சியை இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் காணலாம். இக்கூத்து குறிப்பாகச் செட்டிபாளயம், களுதாவளை போன்ற இடங்களில் இன்றும் ஆடப்படுகிறது. (மௌனகுரு சி.ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு, குமரன் புத்தக வெளியீடு 2008, பக்கம் - 50)

**முடிவுரை.**

மேலே கூறப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் நோக்குகிற போது ஈழத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்கள் நாட்டுப்புறக் கலைகளை வளர்ப்பதில் மிகவும் சிறந்து விளங்குகின்றனர் என்பது புலனாகின்றது.

**துணைநூற் பட்டியல்.**

1 அகிலன்.சி — மட்டக்களப்பு கிராமியத் தெய்வ வழிபாட்டில் காணப்படும் இசைமரபு பற்றி ஓர் ஆய்வு யாழ்ப் பல்கலைக்கழகம், 2004.

2. அம்மன்கிளி முருகதாஸ் — இலங்கைத் தமிழரிடையே வாய்மொழி இலக்கியம், குமரன் பதிப்பகம், சென்னை, 2007.

3. இளையதம்பி பாலசுந்தரம் — ஈழத்து நாட்டார் பாடல்கள் தமிழ்ப் பதிப்பகம், மெய்ப்பொருள் அச்சகம் சென்னை, 1979.

4 சிவரெத்தினம்.சு — சடங்குகளினூடாக மட்டக்களப்பு விபுலம் பதிப்பகம், 2008.

5. மௌனகுரு.சி — மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள் விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு, 1998.